ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

04.09.2025

1. வரம்பல தருகின்ற வடிவேலனை
வணங்கியே வாசி பலம் கண்டு
அறம்பல புரிந்து ஆறுமுகனாராகவே
அவதாரம் கொண்டு சோதி கலந்து

2. சோதியாய் அருளும் அரங்கன் யானும்
சீடர்கட்கு உலக மக்களுக்கு
மேதினியில் அருட்சுவடி வழியாக
மொழிகுவேன் விசுவாவசு யாளி திங்கள்

3. திங்களிலே சூலவாம் குருவார அருளாசி
தேசமெல்லாம் ஞானபலமுற உரைப்பேன்
ஓங்காரக் குடில் படைத்தருளும்
ஓங்காரன் சோதி வழிபாடு தன்னில்

4. தன்னிலே உலகோர் வந்தணுகி
தரிசித்து வேண்டல் வைக்க
அண்ணல் அரங்கன் யானும்
அற்புதக் காட்சிதனை தந்து

5. தந்துமே சர்வ பாதுகாப்பும்
தானவர்களுடன் குடி சிறக்கவும்
சிந்தை மகிழ ஞான வழியோடு
சித்திகள் பெறவும் அருளுவேன்

6. அருளவே சரணாகதி கொண்டு
அன்னதான சேவை ஆற்றி
பெருமளவில் மாதரும பலம் காண
பொருளுதவி செய்து வந்து

7. வந்துமே அரங்கன் பேரிலான
வல்லமை மிக்க கிளைகளிலும்
வந்தணுகி தொடர்பை கூட்டி
வகையான தொண்டு செய்திட

8. செய்திட அரங்கன் என்னுடன்
சுப்ரமண்யரின் ஆசியும் காட்சியும்
அய்யமற கண்டனுகி நின்று
அவரவரும் ஞானிகள் ஆவரப்பா

9. அப்பனே உயர் தொண்டனாகியும்
அவரவர் வினை வழி சோடை
தப்பாமல் அணுகி இடர் தந்தாலும்
தவராஜன் என் தயவாலே

10. தயவாலே சூட்சும ஆசியாலே
தானாக பீடை சோடையும்
நேயமிலா இடைகண்டமும் நீக்கி
நெடிய ஆயுளோடு வாழ அருளி

11. அருளி ஆயுள் ஆரோக்கியம்
ஆனந்த ஞான வாழ்வு பெற
வரமருளி அரங்கனும் காப்பேன்
வாழ்வாங்கு வாழவும் செய்வேன்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி